**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.259/2016**

**Defense Witness : 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : திநேஷ் | **Caste** | : | |
| **Father's Name** | : துாண்டிநாதன் | **Calling** | : | கிளை மேலாளர், சவித் இந்தியன் பேங்க், திண்டுக்கல் |
| **Village** | : பேராவூரணி | **Religion** | : | |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : | **38/2025** |
| | | **Dated** | : | **07.11.2025** |

**07.11.2025**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**எதிரி ஆஜர்.**

**<u>எதிரி தரப்பு முதல் விசாரணை</u>**

எனக்கு நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் வழக்கறிஞர் அறிவிப்பு மூலம் நான் இன்று ஆஜராகியிருக்கிறேன் என்றால் சரிதான். சந்திரன் மனைவி கிரேசி என்பவர் எங்களது வங்கியில் கணக்கு வைத்துள்ளாரா என்றால் சேவிங்க்ஸ் கணக்கு வைத்துள்ளார். சேவிங்க்ஸ் கணக்கு எண். 0021053000033198 வைத்துள்ளார். நான் 01.01.2014 முதல் 31.12.2015 முடிவு வரையிலான வரவுசெலவு கணக்கு கொண்டுவந்துள்ளேனா என்றால் கொண்டுவந்துள்ளேன். **மேற்படி வரவு செலவு கணக்கு ஆவணம் எ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி வரவு செலவு கணக்கு

விவரத்தில் அதிகபட்சமாக 1530 ரூபாய் 09.11.2015 அன்று தான் அதிகபட்ச தொகையாக வந்துள்ளது. பொதுவாக காசோலை வசூலுக்கு வரும்போது கையொப்பம் சரிபார்ப்போம் என்றால் எங்கள் வங்கியில் கொடுக்கப்பட்ட காசோலையை சரிபார்ப்போம். இந்தியன் வங்கி காசோலை எண்.881426 எந்த தேதியில் எங்களது வங்கியில் வசூலுக்கு செலுத்தப்பட்டுள்ளது என்றால் 05.10.2015 அன்று முதல் முறையாகவும் 16.11.2015 அன்று இரண்டாம் முறை வசூலுக்கு செலுத்தப்பட்டது. முதல் முறை மேற்படி காசோலை போதிய பணம் இல்லை என்று திருப்பப்பட்டது. அவ்வாறு போதிய பணம் இல்லாமல் திருப்பப்படும் பட்சத்தில் இந்தியன் வங்கி எங்களுக்கு இன்டிமேசன் கொடுத்த பின்பு தான் நாங்கள் திருப்பப்பட்டு அனுப்புவோம். இந்தியன் பேங்க் மேற்சொன்னறாவறு இன்டிமேசன் கொடுத்த ஆவணம் எதும் புகார்தாரருக்கு கொடுத்துள்ளீர்களா என்றால் அந்த இன்டிமேசனை நாங்கள் கொடுக்கமாட்டோம். நான் சொல்வதுபோல் மேற்படி இன்டிமேசனை ரிசர்வ் பேங்க் ஆப் இந்தியா விதிப்படி புகார்தாரருக்கு கொடுக்கவேண்டும் என்றால் எனக்கு தெரிந்த வரை இல்லை. நான் எங்களுக்கு இந்தியன் பேங்க் கொடுத்த இன்டிமேசனில் உள்ள சங்கதிகள் வேறு என்றும் நாங்கள் புகார்தாரருக்கு கொடுத்த இன்டிமேசனில் உள்ள காரணம் வேறு என்றும் ரிசர்வ் வங்கி விதிக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.2 எங்கள் வங்கியில் கொடுக்கப்பட்டுள்ள செலான் என்றால் சரிதான். மேற்படி செலான் 28.09.2015 அன்று கொடுக்கப்பட்டுள்ளது. ம.சா.ஆ.3 புகார்தாரருக்கு கொடுக்கப்பட்டுள்ள ரிடன் மெமோ என்றால் சரிதான் மேற்படி ரிடன் மெமோ 06.10.2015 அன்று கொடுக்கப்பட்டுள்ளது. என்னிடம் காட்டப்பட்ட ம.சா.ஆ.4 எங்கள் வங்கியில் செலுத்தப்பட்ட செலான் என்றால் சரிதான். ம.சா.ஆ.5 ரிடன் மெமோ 17.11.2015 அன்று கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். பொதுவாக காசோலை திருப்பப்படும்போது அந்த காரணத்தை தெரிந்து எங்கள் வங்கி மூலமாக மட்டுமே கணக்காளர்களுக்கு கொடுப்போம் என்றால் சரிதான். மேற்படி நடைமுறைதான் எப்போதுமே இருக்கிறது என்றால் சரிதான்.

**<u>மறு விசாரணை</u>**

**இல்லை**

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C

Digitally signed by DINESH KUMAR C
Date: 2025.11.07 15:15:22 +0530

Judicial Magistrate No.II

Dindigul.